ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,126 மாசி மாதம்

# “தமிழர்கள் மறுசிந்தனை!”

## இரண்டாம் பாகம் (முதற்பகுதி)



இந்துமதத்தின் தலைமை ஆச்சாரிய குருபீடம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,126ஆம் ஆண்டின் மாசி மாத வெளியீடு.**

<u>தலைப்பு:</u> **“தமிழர்கள் மறுசிந்தனை - இரண்டாம் பாகம் (முதல் பகுதி)”**

# <u>உள்ளுறை</u>

1. “**தமிழர்கள் மறுசிந்தனை**” - இந்துவேதம், இந்துமதம் பிழைக்க, தழைக்க, உழைக்க அழைக்கிறோம் என்று தமிழர்களுக்காக குருதேவர் எழுதிய நெடிய அஞ்சல் வடிவக் கட்டுரையின் இரண்டாம் பாகத்தின் முதல் பகுதி.
2. **“குருபாரம்பரிய அறிவுரை”** - 13-04-1974இல் குருதேவர் புதுக்கோட்டையைச் சேர்ந்த தமது அடியான் திரு வே. இராமதாசு அவர்களுக்கு எழுதிய அஞ்சலில் உள்ள வாசகம்.

# தமிழர்கள் மறுசிந்தனை

## இந்து வேதம்! இந்து மதம்!!

## பிழைக்க! தழைக்க!! உழைக்க!!!

## அழைக்கிறோம்! அழைக்கிறோம்!

## அழைக்கிறோம்!

## வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

**இந்துமதத் தலைமை ஆச்சாரிய மூலக் குருபீடம்,**
**இந்துமதத் தந்தை, இந்துவேத நாயகம்,**
**ஞானாச்சாரியார்,**
**பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி,**
**குருமகாசன்னிதானம்,**

## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்

**அருளும்**

## செயல்விளக்கத் திருவோலை
## (இரண்டாம் பாகம்)

# இந்து மறுமலர்ச்சி இயக்கம்

இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்ருல் என்ன?

இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அவசியம் என்ன?

இந்து மறுமலர்ச்சி இயக்கமும் மனித வாழ்வுகளும்.

இந்து மறுமலர்ச்சி இயக்கமும் தமிழ்நாடும்.

இந்து மறுமலர்ச்சி இயக்கமும் இந்தியாவும்.

இந்து மறுமலர்ச்சி இயக்கமும் உலகமும்.

இந்து மறுமலர்ச்சி இயக்கமும் அதன் நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களும்.

இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் நிலேயான வாழ்வும், வருங்காலமும்.

... ... ... ...

முதலிய **பல தலேப்புக்களில் சிந்திக்க வேண்டியவர்கள் நாம் என்பதோடு; பிறரைச் சிந்திக்க வைக்கும்படி செய்ய வேண்டியவர்கள் நாம்.**

**1.1.** இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்ருல் என்ன? என்ற விஞவிற்கு விடை கூறுவதன் மூலம்தான் நாம் தமிழ்மொழிக்கும், தமிழினத்திற்கும், தமிழ் நாட்டிற்கும் மிக அரிய பெரிய தொண்டிணேச் செய்தவர்களாவோம். ஏனென்ருல், இந்து என்ற பெயரில் உள்ள செய்திகள் அணேத்தும் ‘இந்துவேதம்’ என்ற தலேப்புக்குள் அடங்குகின்றன. இந்த இந்துவேதம் பற்றிய கருத்துக்கள் சிலவற்றை இங்கு பட்டியலிடுவோம்.

- தமிழ்மொழியில் இருக்கிறது இந்துவேதம்.
- தமிழ்மொழியில் இருக்கிறது அண்டபேரண்டங்கள் அணேத்தையும் விளக்கும் இந்துவேதம்.

- தமிழ்மொழியில் இருக்கிறது கடவுள்களாலேயே எழுதப்படும் இந்துவேதம்.
- தமிழ்மொழியில் இருக்கின்றது கடவுளர் உலகைப் பற்றிய பேருண்மைகள் அனைத்தையும் கூறுகின்ற இந்துவேதம்.
- தமிழ்மொழியில் இருக்கின்றது தமிழ்மொழிதான் கடவுளர் மொழி என்ற பேருண்மையை விளக்கும் இந்துவேதம்.
- தமிழ்மொழியில் இருக்கிறது தமிழ்மொழிதான் அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழி என்ற பேருண்மையை விளக்கும் இந்துவேதம்.
- தமிழ்மொழியில் இருக்கிறது இந்த உலக முதல் வேதமான இந்துவேதம்.
- தமிழ்மொழியில் இருக்கிறது இந்த உலகின் முழுமையான வேதமான இந்துவேதம்.
- தமிழ்மொழியில் இருக்கிறது இந்த உலகில் தோன்றக் கூடிய அனைத்து வகையான பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் உரிய பொதுவேதமான இந்துவேதம்.
- தமிழ்மொழியில் இருக்கிறது இந்த உலகில் தோன்றக் கூடிய அனைத்து மொழியினர்களுக்கும் உரிய பொது வேதமான இந்துவேதம்.
- தமிழ்மொழியில் இருக்கிறது இந்த உலகில் தோன்றக் கூடிய அனைத்து இனத்தவர்களுக்கும் உரிய பொதுவேதமான இந்துவேதம்.
- தமிழ்மொழியில் இருக்கிறது கடவுள்களே அடிக்கடி நேரில் வந்து உதவிடச் செய்யும் இந்துவேதம்.
- தமிழ்மொழியில் இருக்கிறது விரும்புகிற மனிதர்களெல்லாம் கடவுள்களைச் சந்திக்க உதவும் இந்துவேதம்.

- ♦ தமிழ்மொழியில் இருக்கிறது கடவுள்களை மனிதர்களாகப் பிறப்பெடுக்கச் செய்யும் இந்துவேதம்.
- ♦ தமிழ்மொழியில் இருக்கிறது மனிதர்களைக் கடவுளாக்கும் இந்துவேதம்.
- ♦ தமிழ்மொழியில் இருக்கிறது எந்தப் பொருளையும் கடவுள் ஆற்றல் ஊற்றெடுக்கும் கடவுளாக மாற்றும் இந்துவேதம்.
- ♦ தமிழ்மொழியில் இருக்கிறது ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றையும் விளக்கும் இந்துவேதம்.
- ♦ தமிழ்மொழியில் இருக்கிறது முற்பிறப்பு, இப்பிறப்பு, மறுபிறப்பு என்ற மூன்றையும் விளக்கும் இந்துவேதம்.
- ♦ தமிழ்மொழியில் இருக்கிறது 'நல்லவைகளைச் செய்தவர்களே மானுடராகப் பிறக்கிறார்' என்ற பேருண்மையை விளக்கும் இந்துவேதம்.
- ♦ தமிழ்மொழியில் இருக்கிறது 'மனிதப் பிறவியே இனிய புனிதப் பிறவி' என்று கூறும் இந்துவேதம்.
- ♦ தமிழ்மொழியில் இருக்கிறது 'முன்னோர்களை வழிபடலும், மூத்தோர்களை பணிந்து போற்றிப் பேணிப் பாதுகாத்தலுமே சிறந்த அற வாழ்வு, தவ வாழ்வு, மத வாழ்வு' என்று கூறும் இந்துவேதம்.
- ♦ தமிழ்மொழியில் இருக்கிறது 'கடவுளர்களில் ஆண், பெண், அலி என்ற மூவகையினர் உண்டு' என்று கூறும் இந்துவேதம்.
- ♦ தமிழ்மொழியில் இருக்கிறது 'கடவுள்களில் பிறப்பவர்கள், இறப்பவர்கள், பிறப்பிறப்பற்ற பெருநிலை பெறுபவர்கள் என்ற மூன்று வகையினரும் உண்டு' என்று கூறும் இந்துவேதம்.

- ♦ தமிழ்மொழியில்தான் ‘ஒரு மொழிக்குரிய கடவுள்கள் அந்த மொழியினருக்கு மட்டுமே உதவுவார்கள்’ என்று கூறும் இந்துவேதம் இருக்கிறது.
- ♦ தமிழ்மொழியில்தான் ‘ஒரு நாட்டுக்குரிய கடவுள்கள் அந்த நாட்டவருக்கு மட்டுமே உதவுவார்கள்’ என்று கூறும் இந்துவேதம் இருக்கிறது.
- ♦ தமிழ்மொழியில்தான் ‘ஓர் இனத்துக்குரிய கடவுள்கள் அந்த இனத்தவருக்கு மட்டுமே உதவுவார்கள்’ என்று கூறும் இந்துவேதம் இருக்கிறது.
- ♦ தமிழ்மொழியில்தான் ‘தமிழ்மொழியே தெய்வமொழி, தேவமொழி, கடவுளர் மொழி’ என்று கூறும் இந்துவேதம் இருக்கிறது.
- ♦ தமிழ்மொழியில்தான் ‘தமிழர்களே அருளுலகின் மூலவர்கள், காவலர்கள், வாரிசுகள்’ என்று கூறும் இந்துவேதம் இருக்கிறது.
- ♦ தமிழ்மொழியில்தான் ‘தமிழ்நாடே அருட்பயிர்களின் நாற்றங்கால், விதைப்பண்ணை’ என்று கூறும் இந்துவேதம் இருக்கிறது.

... ... ....

இப்படி தமிழின் பெருமையைப் பற்றி கூறும் இந்தப் பட்டியல் விரிந்து கொண்டே போகும் என்பதால் இத்துடன் நிறுத்துகிறோம். இப்படித் தமிழின் அருமை பெருமைகளை விளக்கும் பணியினைச் செய்யப் புறப்பட்டிருப்பதுதான் இந்து மறுமலர்ச்சி இயக்கம்.

**1.2.** இந்து மறுமலர்ச்சி இயக்கம் தமிழ்மொழியின் பெருமையினை விளக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது என்பதை விளக்க 1.1. பிரிவில் ஒரு பட்டியல் கொடுத்தோம். இப்பொழுது இந்து மறுமலர்ச்சி இயக்கம் தமிழர்களின் பெருமைகளை விளக்கிடும் பணியில் ஈடுபட்டிருக்கிறது என்பதற்குரிய பட்டியலை இந்த 1.2. பிரிவில் தருகிறோம்.

- தமிழர்களே இம்மண்ணுலகின் முதல் இனத்தவர்.
- தமிழர்களே இம்மண்ணுலகின் பூர்வீகக் குடிகள்.
- தமிழர்களே அருளுலகின் வாரிசுகள்.
- தமிழர்களே அருளுலகின் மூலவர்கள்.
- தமிழர்களே அருளுலகின் காவலர்கள்.
- தமிழர்களே அருளுலகின் வித்துக்கள்.
- தமிழர்களே அருளுலகின் சொத்துக்கள்.

... ... எனும் இப்பட்டியல் விரிவஞ்சி இத்துடன் நிறைவு செய்யப்படுகிறது. இப்பட்டியலிலுள்ள அருளூறு வாசகங்கள், அருளுரை வாசகங்களின் மூலம் தமிழர்களின் பெருமையை நிலைநாட்டப் புறப்பட்டிருக்கிறது இந்து மறுமலர்ச்சி இயக்கம்.

**1.3.** இந்து மறுமலர்ச்சி இயக்கம் தமிழர்களின் பெருமைகளை விளக்கிடும் பணியில் ஈடுபட்டிருக்கிறது என்பதற்குரிய பட்டியலை இந்த 1.2. பிரிவில் கொடுத்தோம். இப்பொழுது, 1.3. பிரிவில், இந்து மறுமலர்ச்சி இயக்கம் தமிழ்நாட்டின் பெருமைகளை விளக்கிடும் பணியில் ஈடுபட்டிருக்கிறது என்பதற்குரிய பட்டியலைத் தருகிறோம்.

- தமிழ்நாடே இந்த உலகில் தோன்றிய பெருநிலப்பரப்பான இளமுறியாக் கண்டத்தின் மிஞ்சிய சிறந்த பகுதியாகும்.
- தமிழ்நாடே இந்த உலகின் கடவுள்கள் அனைத்தும் வந்து தங்கும் திருநாடு.
- தமிழ்நாடே அருளுலகின் மூலக் கருவறை.
- தமிழ்நாடே அருட்பயிர்களின் விதைப்பண்ணையாகவும், நாற்றங்காலாகவும் இருக்கின்றது.
- தமிழ்நாடே நாற்பத்தெட்டு (48) வகையான கருவறைகளையும், நாற்பத்தெட்டு (48) வகையான வெட்டவெளிக் கருவறைகளையும், நாற்பத்தெட்டு (48) வகையான வழிபாட்டு நிலையக்

கருவறைகளையும், நாற்பத்தெட்டு (48) வகையான கோயில் மூலக் கருவறைகளையும் ஆக மொத்தம் நூற்றுத் தொண்ணூற்றிரண்டு (192) வகைப்பட்ட கருவறைகளையும் பெற்றுள்ள ஒரே நாடாகும்.

- தமிழ்நாடுதான் 48 வகைப்பட்ட வழிபடு நிலையங்களையும் உடைய ஒரே நாடாகும்.
- தமிழ்நாடுதான் 108 வகைப்பட்ட திருப்பதிகளையும், 243 வகைப்பட்ட சத்தி பீடங்களையும், 1008 வகைப்பட்ட சிவாலயங்களையும்; ஆக மொத்தம் 1359 வகைப்பட்ட அருளூறு அருள் நிலையங்களையும் உடைய ஒரே நாடாகும்.
- தமிழ்நாடுதான் பிண்டங்கள், அண்டங்கள், பேரண்டங்கள், அண்டபேரண்டங்கள் எனும் நான்கு வகைப்பட்ட துண்டங்கள் எனப்படும் உண்டங்களோடு தொடர்புடைய ஒரே ஒரு நாடாகும்.
- தமிழ்நாடுதான் அருவங்களும், அருவுருவங்களும், உருவ அருவங்களும், உருவங்களும் ஆகிய நான்கு வகைப்-பட்டவர்களையும் தொடர்ந்து தோற்றுவித்துப் பேணிப் பாதுகாத்துப் பயன்படுத்தி வருகின்ற ஒரே நாடாகும்.
- தமிழ்நாடுதான் திருக்கல், தருக்கல், கருக்கல், குருக்கல் எனும் நான்கு வகைப்பட்ட கடவுள்களையும் தொடர்ந்து தோற்றுவித்துப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயன்படுத்தி வருகின்ற ஒரே நாடாகும்.
- தமிழ்நாடுதான் 48 வகைப்பட்ட கடவுள்களையும் தொடர்ந்து தோற்றுவித்துப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயன்படுத்தி வருகின்ற ஒரே நாடாகும்.

- தமிழ்நாடுதான் 48 வகைப்பட்ட வழிபடு நிலையினர்களையும் தொடர்ந்து தோற்றுவித்துப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயன்படுத்தி வருகின்ற ஒரே நாடாகும்.
- தமிழ்நாடுதான் 48 வகைப்பட்ட சித்தர்களையும் தொடர்ந்து தோற்றுவித்துப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயன்படுத்தி வருகின்ற ஒரே நாடாகும்.
- தமிழ்நாடுதான் பீடாதிபதி வழி மூன்று வகை ஆச்சாரியார்களையும், எண்வகை மூல ஆச்சாரியார்களையும், பதின்மூன்று வகை குருவழி ஆச்சாரியார்களையும், பதினான்கு வகை சித்தி வழி ஆச்சாரியார்களையும் ஆக (38) முப்பத்தியெட்டு வகைப்பட்ட ஆச்சாரியார்களையும் தோற்றுவித்துப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயன்படுத்தி வருகின்ற ஒரே ஒரு நாடாகும்.
- தமிழ்நாடுதான் 48 வகைப்பட்ட அருளாளர்களையும், 48 வகைப்பட்ட அருளாளிகளையும், 48 வகைப்பட்ட அருளாடு நாயகங்களையும் ஆக மொத்தம் நூற்று நாற்பத்து நான்கு (144) வகைப்பட்ட அருட்கலைஞர்களையும் தோற்றுவித்துப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயன்படுத்தி வருகின்ற ஒரே ஒரு நாடாகும்.
- தமிழ்நாடுதான் 48 வகைப்பட்ட மருளாளர்களையும், 48 வகைப்பட்ட மருளாளிகளையும், 48 வகைப்பட்ட மருளாடு நாயகங்களையும் ஆக மொத்தம் நூற்று நாற்பத்து நான்கு (144) வகைப்பட்ட மருட்கலைஞர்களையும் தோற்றுவித்துப் போற்றிப் பேணிப் பாதுகாத்துப் பயன்படுத்தி வருகின்ற ஒரே ஒரு நாடாகும்.
- தமிழ்நாடுதான் இந்த உலகோடு தொடர்புடைய முப்பத்து மூவாயிரம் கோடி தேவர்களும் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரே ஒரு நாடாகும்.

- தமிழ்நாடுதான் இந்த உலகோடு தொடர்புடைய நாற்பத்தெட்டாயிரம் கோடி இருடிகளும் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரே ஒரு நாடாகும்.
- தமிழ்நாடுதான் இந்த உலகோடு தொடர்புடைய ஆயிரம் கோடி தேவதைகளும் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரே ஒரு நாடாகும்.
- தமிழ்நாடுதான் இந்த உலகோடு தொடர்புடைய தொண்ணூற்றுருயிரம் கோடி கணங்களும் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரே ஒரு நாடாகும்.
- தமிழ்நாடுதான் இந்த உலகோடு தொடர்புடைய நூற்றியெட்டாயிரம் கோடி முனிவர்களும் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரே ஒரு நாடாகும்.

... ... ...

விரிவஞ்சி இத்துடன் நிறைவு செய்கிறோம். இப்பட்டியலிலுள்ள அருளுரை வாசகங்களின் மூலம் தமிழ்நாட்டின் பெருமையை நிலைநாட்டப் புறப்பட்டிருக்கிறது இந்து மறுமலர்ச்சி இயக்கம்.

**1.4.** இப்படித் தமிழ்மொழி, தமிழர்கள், தமிழ்நாடு எனும் முக்கோண பீடத்தை உலகம் முழுவதும் உணரும்படி; உணர்ந்து பயன்படும்படிச் செய்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட ஓர் இயக்கம்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம். இப் பேருண்மைகளை உணர்ந்து தமிழர்களாக உள்ள ஒவ்வொருவரும் இதில் உறுப்பினராகச் சேர வேண்டும் அல்லது சேர்க்கப்பட வேண்டும். அப்பொழுதுதான், இந்த உலகம் முழுவதும் நன்மையடையக் கூடிய இந்துவேதம்; தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு எனும் முக்கோணப் பீடத்தில் நன்கு வடிவப்பட்டு, வாழ்வுற்று, வளம்பெற்று, வலிமையில் சிறந்து பொலிவோடு செயல்பட்டிட முடியும்! பொலிவோடு செயல்பட்டிட முடியும்! பொலிவோடு

செயல்பட்டிட முடியும்! எனவே, இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்பது உலகம் முழுவதும் உள்ள மொழியினர்களுக்கும், இனத்தவர்களுக்கும், நாட்டவர்களுக்கும் தொண்டு செய்யப் புறப்பட்டிருக்கின்ற ஓர் ஒப்புயர்வற்ற இயக்கமாகும். எனவே, நம்மவர் அனைவரும் தம்மால் இயன்ற அளவு பெரிய பெரிய முயற்சிகளைச் செய்து விரைந்து தமிழர்களின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் இந்து மறுமலர்ச்சி இயக்கம் நிலையாக இடம்பெற்று வளமாக வளருவதற்குரிய வளமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

## 2. இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அவசியம் என்ன?

இன்றைய நிலையில் தமிழர்களுடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் ‘இந்து’ என்ற சொல்லே அன்னியமான ஒரு சொல்லாக, வேண்டாத ஒரு சொல்லாக, விருப்பமில்லாத ஒரு சொல்லாக, வெறுப்புக்குரிய ஒரு சொல்லாக, மறுப்புக்குரிய ஒரு சொல்லாக, எதிர்ப்புக்குரிய ஒரு சொல்லாக, மடமைக்குரிய ஒரு சொல்லாக, மூடநம்பிக்கைக்குரிய ஒரு சொல்லாக, முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடக் கூடிய ஒரு சொல்லாக, பழமைவாதத்திற்கு பாதுகாப்பளிக்கக் கூடிய ஒரு சொல்லாக ... கருதப்பட்டு வருவதை மாற்றுவதற்காக இந்து மறுமலர்ச்சி இயக்கம் அவசியம் தேவைப்படுகின்றது. அதாவது, ‘இந்து’ என்ற சொல் ஓர் அழகிய இனிய பொருளாழமிக்க தமிழ்ச்சொல் என்ற பேருண்மையையும்; இந்த ‘இந்து’ என்ற சொல்லுக்கு நூற்றுக் கணக்கான தமிழ்ச் சொற்களில் பொருள் கூறப்பட்டிருக்கின்றது என்ற பேருண்மையையும்; இந்த ‘இந்து’ என்ற சொல்லின் மூலம்தான் தமிழ்மொழியும், தமிழர்களும், தமிழ்நாடும் விழிச்சி பெற்று எழிச்சியுற்று கிளர்ச்சிமிகு பயிற்சிகளைச் செய்து

வளர்ச்சிமிகு முயற்சிகளை மேற்கொண்டு செழிச்சி எய்தி உயர்ச்சி அடைந்திட முடியும், உயர்ச்சி அடைந்திட முடியும், உயர்ச்சி அடைந்திட முடியும் என்ற பேருண்மையையும் ... விளக்குவதற்காக இந்து மறுமலர்ச்சி இயக்கம் அவசியம் தேவை! இந்து மறுமலர்ச்சி இயக்கம் அவசியம் தேவை!! இந்து மறுமலர்ச்சி இயக்கம் அவசியம் தேவை!!!

## 3. இந்து மறுமலர்ச்சி இயக்கமும் மனித வாழ்வுகளும்.

இன்றைய நிலையில், ஒவ்வொரு கிராமத்திலும், சிற்றூரிலும், பேரூரிலும் சாதிச் சண்டைகள், மதமாற்றுச் சண்டைகள், மொழிச் சண்டைகள், இனச் சண்டைகள் ... முதலியவை நச்சுப் பூண்டுகள் போல் அழித்தொழிக்கப்பட முடியாமல்; அகற்ற அகற்ற பசுமையாக முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்து கொண்டிருக்கின்றன உலக அளவில். எனவே, உலகளாவிய நிலையில் அழிக்க முடியாத நச்சுப் பூண்டுகளாக பசுமையாக முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்து கொண்டிருக்கக் கூடிய மொழிவெறி, இனவெறி, நாட்டுவெறி முதலிய அனைத்து வெறிகளுக்கும் முடிவு கட்டி மனித வாழ்வு உலக அளவில் நிம்மதியும், நிறைவும், அமைதியும், மகிழ்வும், நிதானமும், சமாதானமும், சமத்துவமும், பொதுவுடமையும் பெற்றிடுமாறு செய்வதற்குரிய அனைத்து வகையான வல்லமைகளையும், அக்கறைகளையும், ஆர்வங்களையும், ஆற்றல்மிகு திறமைகளையும், ஆக்கந்தரு செயல்திட்டங்களையும் உடைய ஓர் ஒப்புயர்வற்ற இயக்கம்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம்! ஓர் ஒப்புயர்வற்ற இயக்கம்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம்!! ஓர் ஒப்புயர்வற்ற இயக்கம்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம்!!!

எனவே, தமிழராகப் பிறந்திருக்கக் கூடிய ஒவ்வொருவரும் அல்லது தன்னுணர்வும், தன்னம்பிக்கையும், பொதுநல நாட்டமும் உடைய ஒவ்வோர் தமிழரும் தமிழ்மொழியில் உள்ள இந்துவேதத்தை உலக அளவில் செயலாக்குவதற்காக உடனடியாக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை ஒவ்வொரு தமிழனுடைய இல்லத்திலும், ஒவ்வொரு தமிழனுடைய உள்ளத்திலும் தோற்றுவித்து வளமாக வளரச் செய்யும் பணியில் ஈடுபட வேண்டும்! ஈடுபட வேண்டும்!! ஈடுபட வேண்டும்!!!

அதுதான் ***இந்து மறுமலர்ச்சி இயக்கமும் மனித வாழ்வுகளும்*** என்று தலைப்பிட்டு; பேசும் தமிழில் உள்ள உலகப் பொதுவேதமான இந்துவேதத்திற்குச் செய்யும் கடமையாகும். அதாவது 'இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் வளர்ச்சியே இந்துவேதத்தின் வளர்ச்சி', 'இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் உயர்ச்சியே இந்து வேதத்தின் உயர்ச்சி', 'இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் வளமான வாழ்வே இந்துவேதத்தின் வளமான வாழ்வு', 'இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் ஆட்சியே இந்துவேதத்தின் ஆட்சி', 'இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் போதனையே இந்துவேதத்தின் போதனை', 'இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் சாதனையே இந்து வேதத்தின் சாதனை' ... இப்படி இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அவசியத்தை ஒவ்வொரு தமிழனும் உலகுக்கு உணர்த்த முற்பட வேண்டும். எனவே, தெருத்தெருவாக, ஊர் ஊராக, வட்ட வட்டமாக, வட்டார வட்டாரமாக, மாவட்ட மாவட்டமாக, மண்டல மண்டலமாக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கிளைகளைத் தோற்றுவித்திடுங்கள், தோற்றுவித்திடுங்கள், தோற்றுவித்திடுங்கள்.

# <u>4. இந்து மறுமலர்ச்சி இயக்கமும் தமிழ்நாடும்.</u>

இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்ருல், இந்து மத மறுமலர்ச்சி இயக்கம் என்றோ, இந்துக்களின் மறுமலர்ச்சி இயக்கம் என்றோ பொருள் கொள்ளக் கூடாது.

இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்ருல் இந்து வேத மறுமலர்ச்சி இயக்கம் என்று பொருள்.

இந்துவேதம் உலகம் முழுதுமுள்ள எல்லா மொழி மக்களுக்கும், எல்லா இன மக்களுக்கும், எல்லா நாட்டு மக்களுக்கும் உரிய ஒன்ருகும். எனவே, இந்துவேதத்தை தமிழ்மொழிக்கு மட்டும் உரியது என்றோ, தமிழ் இனத்தவர்களுக்கு மட்டும் உரியது என்றோ, தமிழ் நாட்டுக்கு மட்டும் உரியது என்றோ வரையறைப் படுத்திக் கொள்ள முடியாது. ஆனுல், இந்துவேதம் முதல் முதல் முழுமையாகத் தமிழ்மொழியில்தான் வெளியிடப் பட்டது. எனவே, தமிழ்மொழி விழிச்சி பெற்று, எழிச்சி பெற்று, செழிச்சி பெற்று, ஆட்சி பெற்று உரிமையும், பெருமையும் பெற்று விளங்கினுல்தான்; தமிழ்மொழியில் உள்ள இந்துவேதம் உலகிலுள்ள எல்லா மொழிகளுக்கும் விழிச்சியையும், எழிச்சியையும், செழிச்சியையும், ஆட்சியையும் தர முடியும். <u>**அதற்காகத்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம் தமிழ்மொழியின் உரிமை வாழ்வுக்கும், தமிழ்மொழியின் பெருமித வாழ்வுக்கும், தமிழ்மொழியின் வள வாழ்வுக்கும் வலிமை வாழ்வுக்கும், தமிழ்மொழியின் மறுமலர்ச்சிக்கும் பாடுபடுகின்ற ஓர் இயக்கமாகச் செயல்பட வேண்டும் என்ற கொள்கையும், குறிக்கோளும், செயல்திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன**</u>.

**<u>குறிப்பு</u>:-** எனவே, தமிழ்மொழியிடத்தும், தமிழ் இலக்கியத்திடத்தும், தமிழ்மொழிக் கலைகளிடத்தும் பற்றும், பாசமும், ஈடுபாடும், ஆர்வமும் உடைய தமிழர்கள் அனைவரும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர வேண்டும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர வேண்டும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர வேண்டும். இவர்களோடு 'தமிழ் வாழ்க', 'சைவம் வாழ்க', 'தமிழே சைவம்', 'தமிழே சிவன்', 'தமிழே இறை', 'தமிழே கடவுள்' ... என்று சொல்லுகின்ற சைவ சித்தாந்திகள் அனைவரும் இளைஞர், பெரியோர் என்ற வேறுபாடின்றியும், ஆண் பெண் என்ற வேறுபாடின்றியும் அனைவரும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர வேண்டும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர வேண்டும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர வேண்டும்.

இம்மண்ணுலகம் முழுவதும் தோன்றக் கூடிய அனைத்து வகையான இன மக்களுக்கும் உரிய ஓர் பொதுவேதம் என்று இந்த உலகின் ஆரம்பக் காலத்திலேயே தோற்றுவிக்கப்பட்ட ஓர் ஒப்புயர்வற்ற உலகப் பொது வேதமே இந்துவேதம். ஆனால், இந்த உலகப் பொது வேதத்திற்கு தமிழர்களே மூலவர்களாகவும், காவலர்களாகவும், நாயகங்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட அருள் வாரிசுகளாகவும் உருவாக்கப் பட்டு விட்டார்கள். எனவே, இந்தத் தமிழினத்தவர்களின் மூலம்தான்; அதாவது, தமிழர்களின் மூலம்தான் இந்த இந்து வேதத்தின்

நூற்றியெட்டுப் பூசைமொழி நூல்களும்,

நாற்பத்தியெட்டுப் பூசைவிதி நூல்களும்,

தொண்ணூற்றுறு தத்துவ நூல்களும்,

நூற்றுநாற்பத்தி நான்கு செயல்சித்தாந்த நூல்களும்;

ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் வழங்கப்பட்டாக வேண்டும், வழங்கப்பட்டாக வேண்டும், வழங்கப்பட்டாக வேண்டும். எனவே, **இந்து வேதத்தின் மூலம் இந்த உலகிலுள்ள எல்லா இன மக்களுக்கும்**

**நன்மை விளைய வேண்டுமென்றால் முதலில் தமிழர்கள் அனைவரும் ஒற்றுமைப்பட வேண்டும், ஒருமைப்பட வேண்டும். அதற்காகத் தமிழர்கள் தங்களுக்கிடையே உள்ள எல்லா வகையான குறுகிய, தன்னல வெறிகளையும், அகம்பாவ ஆணவப் போக்குகளையும், வம்பு வீம்புகளையும், போட்டி பொறாமைகளையும், சாதிமத வெறிகளையும், பேராசைகளையும் தத்துவ ரீதியாகச் சிந்தித்து அகற்றி விட்டு தன்மான உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, தனது தமிழின உணர்வு, தனது இன நல உரிமையுணர்வு, தனது இனப் பண்பாட்டுப் பிடிப்புணர்வு, தனது இன நாகரிகப் பற்றுணர்வு, ... முதலிய உணர்வுகளை யெல்லாம் விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியும் பெறச் செய்திட்டால்தான் தமிழின ஒற்றுமையும், ஒருமைப்பாடும் உருவாகிடும்! உருவாகிடும்!! உருவாகிடும்!!! இதற்காகத் தன்னைத் தமிழன் என்று உணர்கிறவர்களும், தன்னைத் தமிழன் என்று எண்ணுகிறவர்களும், தன்னைத் தமிழன் என்று நம்புகிறவர்களும், தன் காலத்தில் தனது தமிழினத்தவர்களுக்கு ஊசிமுனையளவாவது நன்மை செய்ய வேண்டும் என்ற கொள்கையையும், குறிக்கோளையும் உடைய தமிழர்கள்...** எனப்படும் இந்தப் பட்டியல்களுக்குரிய தமிழர்கள் அனைவரும் உடனடியாக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர வேண்டும். சேர்ந்து வாழ்நாள் முழுதும் உழைக்க வேண்டும், உழைக்க வேண்டும், உழைக்க வேண்டும்.

இந்த மண்ணுலகம் முழுவதும் தோன்றக் கூடிய அனைத்து வகையான நாடுகளுக்கும் உரிய ஒரே ஒரு பொதுவேதம் என்று இந்த உலகின் ஆரம்பக் காலத்திலேயே தோற்றுவிக்கப்பட்ட ஓர் ஒப்புயர்வற்ற உலகப் பொதுவேதமே இந்துவேதம். ஆனால், இந்த உலகப் பொதுவேதமான இந்து வேதத்தின் விதைப் பண்ணையாகவும், நாற்றங்காலாகவும் இந்தத் தெய்வீகத் தமிழ்த் திருநாடுதான் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப் பட்டிருக்கிறது. எனவே, இந்தத்

தெய்வீகத் தமிழ்த் திருநாடு எல்லாவகையான உரிமைகளேயும், பெருமைகளேயும் தனக்கே உரிய பண்பாட்டுப் பாரம்பரிய வாழ்வுகளேயும், நாகரிகச் சிறப்புக்களேயும் இயற்கையாகப் பெற்றுத் திகழ வேண்டும், திகழ வேண்டும், திகழ வேண்டும்.

அதற்காக இந்தத் தமிழ்நாட்டு மக்களாகிய தமிழர்கள் தமிழ்நாட்டின் காலிநிலேகளேயும், கூலி நிலேகளேயும், போலி நிலேகளேயும், தேக்க முடக்க அடக்க ஒடுக்க வீக்க நிலேகளேயும், வறுமைநிலேகளேயும், வெறுமை நிலேகளேயும் **மாற்றிடப் பாடுபட முன்வர வேண்டும், மாற்றிடப் பாடுபட முன்வர வேண்டும், மாற்றிடப் பாடுபட முன்வர வேண்டும்**. அதற்காக இந்தத் தமிழ்நாட்டு மண்ணுக்கே உரிய பாரம்பரிய வீரிய வித்துக்களாகத் தங்களே எண்ணுகின்ற தமிழர்களும் உடனடியாக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர வேண்டும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர வேண்டும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர வேண்டும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் சேர்ந்தே தீர வேண்டும்.

---

## தமிழர்கள் மறுசிந்தனே.

1) சில தமிழர்கள் தங்களேப் பற்றியும், தங்களுடைய இனநிலே, மொழிநிலே, மதநிலே, நாட்டுநிலே, ... முதலியவைகளேப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்க கூடியவைகளேயும், ஏற்கனவே சிந்தித்து வைத்திருப்பவைகளேயும் பற்றி மறு சிந்தனே செய்ய வேண்டும் என்பதற்குரிய தலேப்பாகும்.

2) அப்பொழுதுதான் அண்டை அயலில் உள்ள கேரளம், கர்நாடகம், ஆந்திரம் எனும் திராவிடப் பாரம்பரியத்திற்குரிய மூன்று மாநிலங்களும் தமிழ்நாடு, தமிழர், தமிழ்மொழி, தமிழினம், தமிழர் மதம், ... முதலியவை பற்றி கொண்டிருக்கக் கூடிய கருத்துக்களேப்

பற்றி மறுசிந்தனை செய்ய வேண்டும். அதாவது, திராவிட இனத்தைச் சேர்ந்த இந்த மூன்று மாநிலங்களும், தங்களுடைய தாயான தமிழினம் பற்றிக் கொண்டுள்ள கொள்கைகளையும், அணுகுமுறைகளையும் பற்றி மறுசிந்தனை செய்ய வேண்டும். அதன்மூலம்தான், இந்தத் **திராவிட இனத்துக்குரிய மொழியினர்களில் மூன்று பெரிய மாநிலங்களாக உள்ளவர்கள் தங்களுடைய திராவிடப் பாரம்பரியத்திற்குரிய மூலவேதமான இந்துவேதமும், இந்துவேத மதமான இந்துமதமும் பிழைக்க! தழைக்க! உழைக்க! அழைக்கப்படும் அழைப்பினை ஏற்றுச் செயல்படுத்த முன்வருவார்கள், முன்வருவார்கள், முன்வருவார்கள்.**

3) 'இந்தியா' என்ற நாடு திராவிடப் பாரம்பரியத்திற்குரிய திராவிடர்களின் நாடாகும். இந்தப் பேருண்மையை திராவிட இனத்தின் மூலமான, தாயான, தமிழினத்தின் தாய்மொழியான தமிழ்மொழியில் உள்ள இந்துவேதத்தின் மூலமும், இந்துவேத மதமான இந்து மதத்தின் மூலமும்தான் மிகமிகத் தெளிவாகவும், விளக்கமாகவும், நேரடியாகவும் நிலைநிறுத்தப்படுகிறது. எனவே, இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களும், எல்லா மொழியினர்களும் தாங்கள் திராவிட இனத்தின் வழிவழி வந்தவர்களே என்ற பேருண்மையை முழுமையாக உணர்ந்தும், ஒப்புக்கொண்டும் செயல்படச் செய்திட்டால்தான் திராவிட இந்தியாவின் எல்லா மாநிலத்தவர்களும், எல்லா இனத்தவர்களும், தங்களுடைய மூலமாகவும் தாயாகவும் இருக்கின்ற தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழர்கள் பற்றித் தாங்கள் கொண்டிருக்கக் கூடிய கொள்கைகளையும், குறிக்கோள்களையும் பற்றி மறுசிந்தனை செய்வார்கள்.

அப்படித் தென்னிந்திய மாநிலங்களும், வடஇந்திய மாநிலங்களும் படிப்படியாக அடிப்படையோடு தமிழ்நாடு பற்றியும், தமிழ்மொழி பற்றியும், தமிழர்கள் பற்றியும் மறுசிந்தனை செய்யும்படிச் செய்யப்பட்டால்தான், **இந்த உலகுக்கே, மூலவேதமாகவும், முதல்**

**வேதமாகவும், முழுமையான வேதமாகவும்; அனைத்து இனத்தவர்களுக்கும், மொழியினர்களுக்கும், நாட்டினர்களுக்கும் பொதுவேதமாகவும், கடவுளர்களாலேயே எழுதித் தரப்படுகின்ற வேதமாகவும் தமிழ்மொழியில் இருக்கின்ற இந்துவேதமும்,** இந்துவேதமதமான இந்துமதமும் பிழைக்க, தழைக்க, உழைக்க விடுக்கப்படும் அழைப்புக்கள் உரிய பயன்களைப் பெற முடியும், பெற முடியும், பெற முடியும்.

4) இவற்றையெல்லாம் எண்ணியெண்ணி உடனடியாக தமிழ்மொழியின் பெயராலும், தமிழினத்தின் பெயராலும், தமிழ்நாட்டின் பெயராலும், தமிழரின் மதத்தின் பெயராலும், தமிழ்நாட்டின் வட்ட வட்டாரங்களின் பெயர்களாலும் இருக்கின்ற சிறிய பெரிய அமைப்புக்கள்; சிறிய பெரிய நிறுவன நிர்வாகங்கள், ... முதலிய அனைத்தும் இந்துவேதத்தின் பெயரால், இந்துவேத மதமான இந்துமதத்தின் பெயரால் ஒரே தலைமையான பதினெண்சித்தர் மடத்தின் கீழ் அல்லது பதினெண்சித்தர் மடத்தின் மக்கள் தொடர்பு இயக்கமான இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கீழ் ஒன்றுதிரளும்படிச் செய்ய வேண்டும், ஒன்றுதிரளும்படிச் செய்ய வேண்டும், ஒன்றுதிரளும்படிச் செய்ய வேண்டும். இம்மாபெரும் பணியினை தமிழர்கள் அனைவரும் முழுமையாக உணர்ந்து செயல்படும்படிச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம் முதன்முதலில் தமிழ் நாட்டளவில் விரைந்தும் விரிந்தும் உருவாக்கும் பணி துவக்கப்பட்டிருக்கிறது.

இதற்காகவே, சென்னை-67, காரணோடையில் உள்ள பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலத்தில் அருளுலகப் பயிற்சிகளும், முயற்சி அநுபவங்களும் முறையாக வழங்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ள சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், பண்டாரங்கள், பண்டார சந்நதிகள், பண்டார சந்நிதிகள், அரியவாள்கள், கூரியவாள்கள், சீரியவாள்கள், பெரியவாள்கள், நேரியவாள்கள், வீரியவாள்கள் ஆகிய

ஆறு வாள்கள்; ஏமகோடி பீடாதிபதி, காமகோடி பீடாதிபதி, சோமகோடி பீடாதிபதி, வாமகோடி பீடாதிபதி ஆகிய நான்குவகைப் பீடாதிபதிகள்; ... முதலிய பலவகைப்பட்ட அருளாளர்களும் குக்கிராமங்கள், கிராமங்கள், சிற்றூர்கள், பேரூர்கள், நகரங்கள், மாநகரங்கள், ... என்ற வேறுபாடின்றி எங்கும் எல்லா இடங்களிலும் உருவாக்கப்பட்டு நாடு தழுவிய இந்துவேத மறுமலர்ச்சிப் பணியும், இந்துமத மறுமலர்ச்சி பணியும் துவக்கப்பட்டு விட்டன, துவக்கப்பட்டு விட்டன, துவக்கப்பட்டு விட்டன. எனவே, பொதுமக்கள் அனைவரும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தில் விரைந்தும் விரிந்தும் உறுப்பினராகித் தேவையான நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களை முறையாகவும், நிறைவாகவும் உருவாக்க வேண்டும், உருவாக்க வேண்டும், உருவாக்க வேண்டும்.

இதற்காக, இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், இந்துவேத நாயகம், இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர் மடாதிபதி, இந்துமதத்தின் தலைமை ஆச்சாரியார், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் ஞானச்சாரியார் அவர்களுடனும் (*~~13, குமாரசாமி தெரு, வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை-53; ஞானச்சாரியார், பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை, 3, N.G.O. நகர், பொன்னேரி, செங்கை மாவட்டம்-601204 என்ற இரு முகவரிகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்~~*), இந்து மறுமலர்ச்சி இயக்கப் பொதுச் செயலாளர், அருள்மிகு ஆத்தாள் தேவி முப்பத்தாறு திருக்கரம் கொண்டருளு தேவி வெல்போர்க் கொற்றவை சன்னிதானம், அருட்சேனைத் தளபதி கு. இரவிமணி அவர்களுடனும் (*~~No. 3, சிவாசி நகர், மேம்பாலம், தஞ்சை - 4~~*) தொடர்பு கொள்ளுங்கள்.

-----------------------------------------------------------------------------------------

# 5. இந்து மறுமலர்ச்சி இயக்கமும் இந்தியாவும்:

**5.1.** இன்றைய இந்தியாவில் அரசியல்வாதிகளால் வட்டார வெறிகள், சாதிவெறிகள், மொழிவெறிகள், இனவெறிகள், மதவெறிகள், ... முதலிய அனைத்து வெறிகளும் தலைவிரித்துப் பேயாட்டம் ஆடுகின்ற நிலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை, கட்டுப்படுத்த முடியவில்லை, கட்டுப்படுத்த முடியவில்லை.

**5.2.** அதாவது இந்தியாவில் உள்ள அரசியல் சட்டங்களும், செயல்திட்டங்களும் எவ்வளவுதான் புதிய புதிய தேவையான மாற்றங்களைப் பெற்ற போதிலும் இந்திய மக்களுக்கிடையில் உள்ள **எந்தவொரு வெறி உணர்ச்சிகளிலும்** எள்முனையளவு கூட மாற்றம் ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவேயில்லை. இது அரசியல்வாதிகளின் பல்வேறு வகையான கட்சி வளர்ச்சி வெறிகளாலும்; ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற பதவி வெறிகளாலும்; பல தனிப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்களின் தன்னல வெறிகளாலும்; ... மென்மேலும் மோசமாகிக் கொண்டிருக்கிறது.

5.3. **இந்தியாவைப் பொறுத்தவரை உலக அளவில் எல்லா வகையான வளங்களையும், வசதி வாய்ப்புகளையும் உடைய அந்நிய மதங்கள் முழுமூச்சுடன் வெறிப்போக்கில் தங்கள் தங்களுடைய மதங்களைப் பரப்புவதில் ஈடுபட்டிருக்கின்றன.** இதைப் பச்சையாகச் சொல்ல வேண்டுமென்றால், அந்நிய மதங்களின் வேட்டைக்காடாகவே இருக்கின்றது இந்தியா. எனவே, இந்தியாவில் எல்லா வகையான வெறியுணர்ச்சிகளும் அடிக்கடி தூண்டிவிடப் பட்டுக் கொண்டேதான் இருக்கும். அதனால், பல்வேறு வகையான வெறியுணர்ச்சிகள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் திடீர் திடீரென்று காட்டுத்தீ

போல் குபீர், குபீரெனக் கொழுந்து விட்டெறிந்து மிகப் பெரிய அளவில் சிதைவுகளேயும், சீரழிவுகளேயும் விளேவித்துக் கொண்டிருக்கின்றன.

**5.4.** இந்திய மக்களில், கணிசமான அளவினர் வேற்று நாட்டு மாற்று மதத்தவர்களால் தங்களுடைய கங்காணிகளாகவும், கூலிகளாகவும், எடுபிடிகளாகவும், அடிமைகளாகவும் ஆக்கப்பட்டு **இந்தியாவிற்குரிய தமிழிலுள்ள பழம்பெரும் வேதமான இந்துவேதத்துக்கும், இந்த இந்துவேத மதமான இந்து மதத்துக்கும் துரோகிகளாகவும், விரோதிகளாகவும், எதிரிகளாகவும் தயாரிக்கப்பட்டு விட்டார்கள்.** இந்த அப்பாவிகள் தாங்கள் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் தாங்கள் குடியிருக்கின்ற வீட்டின் கூரைக்கே தீ வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களேயெல்லாம் திருத்த வேண்டுமென்றால், இந்த உலகின் முதல் வேதமாகவும், மூல வேதமாகவும், முழுமையான வேதமாகவும், பொது வேதமாகவும் தமிழில் தோற்றுவிக்கப்பட்ட இந்துவேதமும், இந்துவேத மதமான இந்துமதமும் பிழைக்க! தழைக்க! உழைக்க! விடுக்கப்படுகின்ற அழைப்பு **ஒவ்வோர் இந்தியனின் நெஞ்சத்தையும், சிந்தையையும் தொட்டுத் தட்டியெழுப்பும்படிச் செய்ய வேண்டும்! தொட்டுத் தட்டியெழுப்பும்படிச் செய்யவேண்டும்! தொட்டுத் தட்டியெழுப்பும்படிச் செய்யவேண்டும்!**

**5.5.** இந்தியாவைப் பொறுத்தவரை இந்தியச் சமுதாயம் விதியால் சபிக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால், இந்திய மக்கள் சமுதாயத்திற்குத் தலைவர்களாக, அறிஞர்களாக, சீர்திருத்த வாதிகளாக, பகுத்தறிவு வாதிகளாக, நாத்திகர்களாக, ஆத்திகர்களாகத் தலைமைதாங்கி வழிகாட்ட முற்படுகிறவர்கள் அனைவருமே இந்தியாவின் உண்மையான நிலவியல் வரலாறு, மானுடவியல் வரலாறு, மொழியியல் வரலாறு, இலக்கிய வரலாறு, அரசியல் வரலாறு, ... முதலியவற்றை ஓரளவு

கூட முறையாகத் தெரிந்து கொண்டு செயல்படுபவர்களாக இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை.

எனவேதான், **இந்தியாவினுடைய வரலாற்றுப் பூர்வமான பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுபாடுகளுக்கும்; நாகரிகத்தின் அடிப்படைகளுக்கும், இலக்கியப் பாரம்பரிய மரபுகளுக்கும், சமய சமுதாயச் சட்டதிட்டக் கட்டுப்பாட்டு விதிகளுக்கும், நடைமுறைகளுக்கும்** தொடர்ந்து சிதைவுகளும், சீரழிவுகளும், இழப்புக்களும் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இவற்றையெல்லாம் சரி செய்ய வேண்டுமென்றால்; இவை அனைத்திற்கும் நாற்றங்காலாக விதைப்பண்ணையாக பாதுகாப்புச் சத்தியாக இருக்கின்ற இந்துவேதமும், இந்துவேத மதமான இந்துமதமும் பிழைக்க, தழைக்க, உழைக்க விடுக்கப்படுகின்ற அழைப்புக்கள் உரிய அளவில் மிகப்பெரிய அளவில் நற்பயன்களைத் தருகின்ற நிலை உருவாக வேண்டும்.

# 6. இந்து மறுமலர்ச்சி இயக்கமும் உலகமும்

**6.1.** இன்றைய நிலையில் உலக வரலாறு கிரேக்கத்திலிருந்தோ, எகிப்திலிருந்தோ, சிரியாவிலிருந்தோ, பாரசீகத்திலிருந்தோ... ஆரம்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. **இந்த ஆரம்பங்கள் அனைத்தும் தவறானவை, தவறானவை, தவறானவை; பயனற்றவை, பயனற்றவை, பயனற்றவை.** ஏனென்றால், மேலே குறிப்பிட்ட ஆரம்பங்களுடைய வரலாறுகள் அனைத்துமே குளறுபடிகளையும், குழப்பங்களையும், இருள்களையும், இருட்டடிப்புக்களையும், அறியாமைகளையும், தெரியாமைகளையும், புரியாமைகளையும் தொடர்ந்து விளைவித்துக் கொண்டிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், இந்த வரலாறுகளில் புதிர்கள் மிகுதியாக நிறைந்து கிடக்கின்றன; சரி செய்ய முடியாத

அல்லது தீர்க்க முடியாத சிக்கல்கள் ஏராளமாக இருக்கின்றன. எனவே, இவற்றையெல்லாம் சரி செய்வதற்காகவாவது இந்த உலகின் தோற்றம் முதல் முடிவு வரை நிகழ்ந்தவைகளேயும், நிகழக் கூடியவைகளேயும் காலக் கணக்கீட்டு அடிப்படையில் மிகமிகத் தெளிவாக விளக்குகின்ற இந்து வேதத்தையும், இந்து வேத மதமான இந்துமதத்தையும் உலக வரலாற்று வல்லுநர்களும், ஆராய்ச்சியாளர்களும், பேராசிரியர்களும் கணிசமான அளவு முழுமையாகத் தெரிந்து கொள்ளும்படிச் செய்யப்படல் வேண்டும், செய்யப்படல் வேண்டும், செய்யப்படல் வேண்டும்.

**6.2.** இந்த உலகில் ஏராளமான வளங்கள் கணக்கற்ற வகைவகையான செல்வங்களாக மண்ணுள் புதைந்தும், மண்மேல் விளேந்து கொண்டும் இருக்கின்றன. இப்படி இந்த உலகம் வளம் நிறைந்ததாக இருந்தும் கூட உலக மக்கள் தொகையில் சரிபாதியினருக்கு மேல் அன்ருடச் சாப்பாட்டுக்கே திண்டாடித் திணறுகின்ற நிலேதான் இருக்கின்றது. இன்னும் சொல்லப் போனல் உலக மக்கள் தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளில் கூட முழுமையடைய முடியாமல் தேவைகளே நினேத்து ஏங்கித் தவித்து அழுது புலம்பி அரற்றித் திரிபவர்களாகவே இருக்கிருர்கள். இதேபோல், உலக மக்கள் தொகையில் நூற்றுக்கு இருபத்தைந்து பேருக்கு மேல் ஒரு நாளேக்கு ஒருவேளே கூடப் பசியாறச் சாப்பிட முடியாமலும், உடம்பை மறைக்க ஒரே ஒரு துணி கூட ஆண்டுக்கு ஒருமுறை கூட வாங்க முடியாமலும், கொடிய வறுமையால் வாடுகிருர்கள். இந்தக் கேவலமான, அவல நிலேகள் தொடர்கின்றன.

இதற்குக் காரணம் உலக அளவில் மொழியின் பேராலும், இனத்தின் பேராலும், நாட்டின் பேராலும் தொடர்ந்து சிறிய சிறிய சண்டைச் சச்சரவுகளும், பெரிய பெரிய போர்களும் திடீர் திடீரென்று ஏற்பட்டுப் பெரிய பெரிய அழிவுகளும், இழப்புக்களும் ஈடு செய்ய

முடியாத அளவுக்கு நிகழ்ந்து வருகின்றன. இவற்றைத் தடுப்பதற்காக முயற்சி செய்தவர்களே யெல்லாம் அவர்களுடைய முயற்சிகளின் பெயரால் பல புதிய புதிய சண்டை சச்சரவுகளும், போராட்டங்களும், போர்களும் உருவாகும்படிச் செய்து விட்டார்கள். எனவேதான், அடிமைநிலைகளும், மிடிமை நிலைகளும், கொடுமைகளும் உலகில்; நாட்டின் பேராலும், இனத்தின் பேராலும், மொழியின் பேராலும், மதத்தின் பேராலும் தொடர்ந்து தோன்றிக் கொண்டேயிருக்கும் நிலை வலுப்பட்டு விட்டது, வளப்பட்டு விட்டது.

இப்படிப்பட்ட மனித நலப் பாதிப்புகளுக்குரிய செயல்நிலைகள் இனிமேலும் வலிமைப்படாமல், வளப்படாமல், வளர்ச்சி பெறுமல் தடுக்க வேண்டுமென்ருல்; அதற்கு உரிய ஒரே வழி இந்துவேதமும், இந்து வேதமதமான இந்துமதமும்தான். ஏனென்ருல், **இந்துவேதம்தான் உலக இனங்களின் விடுதலை, மொழிகளின் விடுதலை, மதங்களின் விடுதலை, ... முதலிய அனைத்தின் விடுதலைகளுக்கும் உரிய தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும், பூசைவிதிகளையும், பூசாமொழிகளையும் வழங்குகிறது. இந்த இந்துவேதத்தின் செயல்வடிவான இந்துமதத்தின் கொள்கைகளும், குறிக்கோள்களும், 'உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு' என்ற குறிக்கோளையும்; 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம்'** என்ற கொள்கையையும்; எதையும் அன்புவழியில், அமைதி வழியில், அறவழியில் அருளை அடிப்படையாகக் கொண்டு சமாதான நோக்கிலும், போக்கிலும் செயல்படுத்த வேண்டும் என்ற செயல்திட்டத்தையும் வழங்குகிறது.

இதுபோல் இந்த உலகில் தோன்றியுள்ள மதங்களில் வேறு எந்த மதமும் அரிய, சீரிய, பெரிய, உயரிய பயன்மிகு கருத்து, கொள்கை, குறிக்கோள், தத்துவம், செயல்திட்டம் உடையதாக இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை. எனவே இந்த உலகின்

உய்வுக்கும், உயர்வுக்கும், சிறப்புக்கும், வளவாழ்வுக்கும், வலிமைச் செழிச்சிக்கும், அமைதிக்கும், சமாதானத்திற்கும், ஒற்றுமைக்கும் உழைக்கக் கூடிய மதம் நமது இந்துமதம் போல் வேறு எந்த மதமும் இல்லை என்ற பேருண்மையை உலக மக்கள் அனைவரும் உணரச் செய்திட்டால் இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்பது ஓர் உலகப் பொது இயக்கமாக வளர்ந்திடும், வளர்ந்திடும், வளர்ந்திடும்; வளர்க்கப்பட்டிடும், வளர்க்கப்பட்டிடும், வளர்க்கப்பட்டிடும். அத்தகைய ஓர் ஒப்புயர்வற்ற அரியநிலை பதினெண்சித்தர்களுடைய இந்து மதத்திற்குக் கலியுகத்தில் ஏற்பட்டிடும், ஏற்பட்டிடும், ஏற்பட்டிடும் என்று பதினெண்சித்தர்களுடைய எல்லா நூல்களும், இந்துவேதமும், இந்து வேத மதமான இந்துமதத்தின் நூல்களும், பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் காலங்கள் தோறும் எழுதப்படும் ‘குருபாரம்பரியம்’ எனப்படும் மத வரலாற்று நூல்களும்; ‘இலக்கிய பாரம்பரியம்’ எனப்படும் சமுதாய வரலாற்று நூல்களும், மொழி வரலாற்று நூல்களும், இலக்கிய வரலாற்று நூல்களும்; ‘அரச பாரம்பரியம்’ எனப்படும் அரசியல் வரலாற்று நூல்களும் ... மிகமிகத் தெளிவாக விளக்குகின்றன.

இவற்றையெல்லாம் போர் முழக்கங்களாக இந்து மறுமலர்ச்சி இயக்கத்தவர்கள் முழக்கிடல் வேண்டும். அந்த முழக்கங்களே உலக அளவில் மதங்களின் பெயராலும், நாடுகளின் பெயராலும், மொழிகளின் பெயராலும், இனங்களின் பெயராலும் நிகழக் கூடிய அனைத்து வகையான தவறுகளையும், தீமைகளையும், கடுமைகளையும், கொடுமைகளையும், அழிவுகளையும், இழிவுகளையும், ஒழிவுகளையும், பழிகளையும், நலிவுகளையும், மெலிவுகளையும், சண்டை சச்சரவுகளையும் போராட்டங்களையும் போர்களையும் எதிர்த்து விடுக்கப்படும் போர் முழக்கங்களாகிடும், எதிர்த்து விடுக்கப்படும் போர் முழக்கங்களாகிடும், எதிர்த்து விடுக்கப்படும் போர் முழக்கங்களாகிடும்.

**6.3.** அப்படி இந்து மறுமலர்ச்சி இயக்கத்தவரின் போர் முழக்கங்கள் இந்த உலகில் நிலவிடும் அனைத்து வகையான அநீதிகளையும், வெறிகளையும், சதிகளையும், சூழ்ச்சிகளையும், சுரண்டல்களையும், ஏமாற்றுக்களையும், மானுட நல்வாழ்வுக்கு விரோதமான செயல்களையும், ... எதிர்த்து விடுக்கும் போர் முழக்கங்களாலேயே மிகப்பெரிய வெற்றிகளும், நன்மைகளும் விளைந்திடும், விளைந்திடும், விளைந்திடும். ஏனென்றால், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கைகளும், குறிக்கோள்களும், நடைமுறைகளும் உலக அளவில் படிப்படியாக அடிப்படையோடு வளரும்போது எவராலும் அல்லது எதனாலும் வெற்றி கொள்ள முடியாத அருட்படை உலகத்தார் அனைவரையும் ஒருங்கு சேர்த்து உருவாகிடும், உருவாகிடும், உருவாகிடும்.

**6.4.** இவற்றையெல்லாம் நன்கு நினைவில் நிலைநிறுத்தி நமது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தவர்கள் முதலில் **தமிழகத்தில் தமிழர்கள் அனைவரும் அல்லது பெரும்பாலான தமிழர்கள் தங்களுக்கிடையில் உள்ள அனைத்து வகையான கூலிநிலைகளையும், போலி நிலைகளையும், அன்னியர்க்கு வழங்கும் வேலிநிலைகளையும், எதையும் சிந்திக்க மறுக்கும் காலிநிலைகளையும், கண்மூடித்தனமான மாறுபாடுகளையும், வேறுபாடுகளையும், முரண்பாடுகளையும் கைவிட்டுவிட்டு அருட்படை ஒன்று அமைந்திடும்படிச் செய்ய வேண்டும்.** அதன்பிறகுதான் <u>தென்னிந்தியா எனும் திராவிட நாட்டளவிலும்</u>, <u>இந்தியா எனும் தமிழருடைய இந்துமத நாட்டளவிலும்</u> அருட்படைகள் படிப்படியாக உருவாகிடும்.

**6.5.** அதாவது நமது இந்து மறுமலர்ச்சி இயக்கம் முதலில் தனது போதனைகளால் தமிழர்களை ஒற்றுமைப்படுத்தி ஒருமைப்படுத்தி இந்துவேதத்தையும், இந்துவேத மதமான இந்துமதத்தையும் பெருமளவில் நடைமுறைப்படுத்தி மானுட நல மேம்பாடு எனும் அரிய சாதனையைச் சாதித்திடல் வேண்டும். அந்தச் சாதனையின் மூலம்தான் இந்து

மறுமலர்ச்சி இயக்கம் படிப்படியாக தென்னிந்தியாவிலும் இந்தியாவிலும் பரவிடும், பரவிடும், பரவிடும்; வளர்ச்சி பெற்றிடும், வளர்ச்சி பெற்றிடும், வளர்ச்சி பெற்றிடும். அதன்பிறகே இந்து மறுமலர்ச்சி இயக்கம் ஓர் ஒப்புயர்வற்ற உலக இயக்கமாக மாறிடும், மாறிடும், மாறிடும். இப்பேருண்மையினை நமது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தவர்கள் முறையாகவும், நிறைவாகவும், முழுமையாகவும் தெரிந்தும், தெரியவைத்தும்!; அறிந்தும், அறியவைத்தும்!; புரிந்தும், புரியவைத்தும்!; ஒப்புக்கொண்டும், ஒப்புக்கொள்ளச் செய்தும் செயல்பட வேண்டும்! செயல்பட வேண்டும்!! செயல்பட வேண்டும்!!! ... செயல்பட்டாக வேண்டும்! செயல்பட்டாக வேண்டும்!! செயல்பட்டாக வேண்டும்!!! செயல்பட்டேயாக வேண்டும்!!!!

# 7. இந்து மறுமலர்ச்சி இயக்கமும் அதன் நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களும்.

**7.1.** இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்றால் இந்துவேத மறுமலர்ச்சி இயக்கம் என்றுதான் பொருள். அதாவது, இந்துவேதத்தின் கொள்கைகளும், குறிக்கோள்களும், நடைமுறைகளும் துணிச்சலாக மீண்டும் செழிச்சிமிக்க வாழ்வியல்களைப் பெற்றிடல் வேண்டும் என்ற நோக்கிலும், போக்கிலும் செயல்படுவதுதான் இந்து மறுமலர்ச்சி இயக்கம்.

**7.2.** இந்து மறுமலர்ச்சி இயக்கம் தனது முயற்சிகளால் மீண்டும் இந்துவேதத்தின் ஆட்சி மீட்சிக்காகப் பாடுபடுகிறது என்பதனால்; இந்துவேதத்தில் எதையும் நான்கு என்று பகுத்துப் பட்டியலிடும் மரபினைப் போலவே அல்லது மரபினை யொட்டியே இந்து மறுமலர்ச்சி இயக்கத்திலுள்ள நிறுவன நிர்வாகங்களுக்குரிய பதவியாளர்கள் தலைவர்,

செயலாளர், பொருளாளர், அமைப்பாளர் என்ற நான்கே நான்கு பதவிகளைப் பெற்றிருக்கின்றது.

**7.3.** இந்துவேதம் '<u>பிண்டம், அண்டம், பேரண்டம், அண்டபேரண்டம் என்பனவற்றின் இயக்கங்களுக்கும் இந்த உலகுக்கும் உள்ள தொடர்புகள் வானவெளியிலுள்ள பன்னிரண்டு இராசிகளின் படிதான் நிகழுகின்றன</u>' என்று மிகத் தெளிவாக ஆணித்தரமாக நேரடியாக வற்புறுத்தி வலியுறுத்திக் கூறுகிறது. அதாவது, இந்த உலகிலுள்ள எல்லாவகையான பயிரினங்களும், உயிரினங்களும், மற்ற பொருள்களும் வானவெளியிலுள்ள ஒன்பது கோள்களாலும், இருபத்தேழு விண்மீன்களாலும் நேரடித் தொடர்புகளைப் பெற்றிருந்தாலும்; நேரடியாகத் தேவையான சத்திகளைப் பெற்றுக் கொண்டிருந்தாலும் இவை அனைத்தின் இயக்கங்களும் வானவெளியில் விண்மீன் கூட்டங்களுக்கிடையில் உள்ள ஈர்ப்புச் சத்திகளின் வடிவங்களாக உருவாக்கப்பட்டுள்ளன, அல்லது உருவாகியுள்ளன.

பன்னிரண்டு இராசிகள்தான் ஒட்டு மொத்தமாக ஐம்பூதங்களால் உருவான இந்த உலகம், இந்த உலகத்தின் பயிரினங்கள், உயிரினங்கள், மற்ற பொருள்கள் எனும் நான்கையும் ஆட்டுவித்து இயக்குகின்றன, ஆட்டுவித்து இயக்குகின்றன, ஆட்டுவித்து இயக்குகின்றன என்ற பேருண்மையே நிலையாக அல்லது நிலையான இந்துவேதத்தின் அடிப்படைக் கொள்கைகளாக இருக்கின்றன; இந்துவேதத்தின் அடிப்படைக் கொள்கைகளாக இருக்கின்றன; இந்துவேதத்தின் அடிப்படைக் கொள்கைகளாக இருக்கின்றன.

**7.4.** இவற்றால்தான் இந்த உலகம் இந்த உலகத்தின் பயிரினங்கள், உயிரினங்கள், மற்ற பொருள்கள் எனும் நான்குக்கும் உதவக்கூடிய இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் முழுமையான பதவிகள் பன்னிரண்டாக இருக்க வேண்டும் என்ற விதி, சட்டம், மரபு, கொள்கை, ... வகுக்கப்பட்டது, வகுக்கப்பட்டது, வகுக்கப்பட்டது. இந்த பன்னிரண்டு

என்ற எண்ணிக்கை இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் நிறுவன நிர்வாகப் பதவிகளின் நிலையான எண்ணிக்கையாக்கப்பட்டது.

இதன்படிதான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்திற்குரிய எல்லாவகையான நிறுவன நிர்வாகங்களுக்குரிய பதவிகளில் 1) தலைவர், 2) இணைத்தலைவர், 3) துணைத்தலைவர், 4) செயலாளர், 5) இணைச் செயலாளர், 6) துணைச் செயலாளர், 7) பொருளாளர், 8) இணைப் பொருளாளர், 9) துணைப் பொருளாளர், 10) அமைப்பாளர், 11) இணை அமைப்பாளர், 12) துணை அமைப்பாளர் என்று பன்னிரண்டு பதவிகள் உருவாக்கப்பட்டு இப்பதவிகளுக்குரிய பன்னிரண்டு பேர்தான் எல்லாச் செயல்களுக்கும் உரிய வழிகளாக, வழிகாட்டிகளாக, வழித்துணைகளாக, வழிப் பயன்களாக இருக்க வேண்டும்! இருக்க வேண்டும்!! இருக்க வேண்டும்!!! ... என்ற நிறுவன நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதுவே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் முழுமையான நிறுவன நிர்வாகக் கட்டமைப்பு ஆகும்.

**7.5.** இந்த இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் நிர்வாகக் கட்டமைப்பின் தத்துவம் அல்லது சித்தாந்தம் அல்லது கொள்கை அல்லது குறிக்கோள் இந்தக் கலியுகத்தில் முதன்முதல் இந்துவேதத்திற்காகவும்; இந்துவேத மதமான இந்துமதத்திற்காகவும் ஓர் அருட்பேரரசை உருவாக்கிய பதிஞோராவது பதினெண்சித்தர் பீடாதிபதியான குவலய குருபீடம், இந்துமதத் தந்தை, இந்துமதத்தின் தலைமை ஆச்சாரியார், இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதி, இந்துமதத்தின் தலைமைக் குருபீடமான பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதி, கருவறை மூலவர்களின் அம்மையப்பர், ஞானாச்சாரியார், இந்துவேத நாயகம், இந்துவேத பீடம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தாம் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள நந்திக்குப் பன்னிரண்டு பற்களை வைத்தார். இந்த நந்தி என்றென்றைக்கும் நின்று நிலவி; இதன் வாயிலுள்ள

பற்களின் எண்ணிக்கையான பன்னிரண்டு என்ற எண்ணிக்கைதான் மனித வாழ்வியலுக்குரிய அடிப்படை எண்ணிக்கை ஆகும். இந்த பேருண்மையின் அடிப்படையில்தான் இந்து முன்னேற்றக் கழகத்தின் நிறுவன நிர்வாகக் கட்டமைப்புகள் பன்னிரண்டு வகையான பதவிகளைக் கட்டாயமாகப் பெற்றிருக்க வேண்டும், கட்டாயமாகப் பெற்றிருக்க வேண்டும், கட்டாயமாகப் பெற்றிருக்க வேண்டும் என்ற நியதி உருவாக்கப்பட்டது.

# 8. இந்து மறுமலர்ச்சி இயக்கமும் அதன் நிலையான வாழ்வும், வருங்காலமும்.

**8.1.** இப்படி ஒரு தலைப்பில் விளக்கம் கொடுப்பதன் மூலம்தான் உலக மக்கள் அனைவரும் 'மெய்யான மதம்' ஒன்று தங்களுடைய வாழ்வின் எல்லா வகையான நலங்களுக்கும், வளங்களுக்கும், வளர்ச்சிகளுக்கும், நிறைவான நிகழ்ச்சிகளுக்கும், நிம்மதியான சமுதாயச் சூழ்நிலைகளுக்கும், அமைதியான அரசியல் சூழ்நிலைகளுக்கும்... நிலையான பாதுகாப்புத் தருவதற்குத் தேவை, தேவை, தேவை என்று புரிந்து உணர்ந்து நம்பிச் செயல்படச் செய்ய முடியும். எனவேதான், இந்த உலகில் முதன்முதல் தோன்றிய இந்து வேதம்தான், இந்து வேதமதமான இந்துமதம்தான் மெய்யான வேதம், மெய்யான மதம் என்ற பேருண்மையை என்றென்றைக்கும், உலக மக்களுக்கு அன்றாடம் உணர்த்திடவும், அறிவுறுத்திடவும், நினைவுபடுத்திடவும் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' என்ற ஒரு நிறுவனம் உலகம் தழுவிய அளவில் நிலையாக இருக்க வேண்டும்! நிலையாக வாழ வேண்டும்!! நிலையாகச் செயல்பட வேண்டும்!!! நிலையாகச் செயல்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டும்.

**8.2.** அதாவது, இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்பது தமிழகத்திற்குள் மட்டும் இருக்க வேண்டிய ஓர் இயக்கம் என்றோ! அல்லது தென்னிந்தியாவிற்குள் மட்டும் இருக்க வேண்டிய ஓர் இயக்கம் என்றோ! அல்லது இந்தியாவிற்குள் மட்டும் இருக்க வேண்டிய ஓர் இயக்கம் என்றோ எந்த ஒரு தனிமனிதனும் எண்ணிடக் கூடாது, எண்ணிடக் கூடாது, எண்ணிடக் கூடாது, எண்ணிடவே கூடாது. இக்கருத்தினை இன்னும் சற்று விளக்கிக் கூற வேண்டுமென்றால் இந்த உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் இந்து மறுமலர்ச்சி இயக்கம் பற்றி எண்ணிடும்படிச் செய்ய வேண்டும். இன்னும் சொல்ல வேண்டுமென்றால்; 'உலகம் முழுவதும் நின்று நிலவிட வேண்டிய ஓர் இயக்கம் இந்து மறுமலர்ச்சி இயக்கம். இந்துவேதக் கருத்துக்களை, கொள்கைகளை, குறிக்கோள்களை, நோக்கங்களை, போக்குகளை உலகம் முழுவதும் பரப்புவதன் மூலமும்; இந்து வேதத்தின் செயல்வடிவான இந்து மதத்தை உலக மக்கள் அனைவரும் ஏற்றுக் கையாளும்படிச் செய்வதன் மூலமும்தான் உலக அளவிலுள்ள எல்லா வகையான தீய சத்திகளையும், தீய உணர்வுகளையும், தீய எண்ணங்களையும் முழுமையாகத் தடுத்து அகற்றிட முடியும், ...' என்றுதான் விளக்கம் கூற வேண்டும்.

**8.3.** இந்த இடத்தில் கடந்த நான்கு யுகக் காலமான 43,73,092 ஆண்டுகள் (இன்றைய கி.பி.1991 முடிய) வாழ்ந்து வரும் இந்துமதம் பதினெண்சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டது என்ற பேருண்மையையும்; கலியுகம் பிறந்து ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தொன்பது ஆண்டுகள் கழித்து இந்த இந்துமத இந்தியாவிற்குள் வந்திட்ட பிறமண்ணினரான பிருமணர்கள் எனும் வட ஆரியர்கள் தங்களுடைய சமசுக்கிருத மொழியில் ஏற்கனவே இந்தியாவில் இருந்த தமிழ்மொழியில் உள்ள இந்துமதத்திலிருந்து சில பகுதிகளை எடுத்து தங்களுடைய வேத மதத்தோடு கலந்து புதிதாக உருவாக்கிய ஹிந்து மதம் வேறு என்ற பேருண்மைகளை உலகுக்கு உணர்த்தியாக வேண்டும்.

அடுத்து பிறமண்ணினரான பிருமணரின் ஹிந்து மதத்தில் உள்ள வேதங்கள், உபநிடதங்கள், சுலோகங்கள், சுருதிகள், யாகமுறைகள், பூசைமுறைகள், கோத்திரப் பிரிவுகள், சாதி வேறுபாடுகள், புரோகித முறைகள், சாத்திரச் சம்பிறதாயங்கள், சடங்குகள், திருமண முறைகள், ஓதுகின்ற மந்திரங்கள், கடவுள்களைப் பற்றிய புராணங்கள், இதிகாசங்கள், ... முதலியவை அனைத்திற்கும்; பதினெண்சித்தர்களுடைய இந்து வேதத்திற்கும், இந்து வேத மதமான இந்துமதத்திற்கும் ஏறத்தாழ எந்தவிதமான ஒற்றுமையும் இல்லை, தொடர்பும் இல்லை. இன்னும் சொல்லப் போனால் பதினெண்சித்தர்களுடைய இந்துவேத மதமான இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டுதான் பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களுடைய ஹிந்து மதத்தைத் தோற்றுவித்த போதிலும் இந்த இரண்டு மதங்களுக்கும் இடையில் அடிப்படையிலேயே எண்ணற்ற வேறுபாடுகளும், மாறுபாடுகளும், முரண்பாடுகளும், நேர்மாறான கொள்கைகளும், போக்குகளும் இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன.

ஆனால் சற்றும் எதிர்பாராத வண்ணம் பிறமண்ணினரெனும் பிருமணரால் தோற்றுவிக்கப்பட்ட ஹிந்து மதம் வெகுவேகமாகப் பரவி இந்து மதம் என்ற ஒன்று இருந்த இடமே தெரியாமல் செய்துவிட்டது. ஆனால், ஹிந்து மதத்தால் பதினெண்சித்தர்களுடைய இந்துவேதத்தைப் புரிந்து செயல்பட முடியவில்லை. மேலும், பதினெண்சித்தர்கள் இந்துவேத மதமான இந்து மதத்திற்காக உருவாக்கிட்ட 1) கருவாக்கு, 2) கருவாக்கியம், 3) கருவாசகம், 4) குருவாக்கு, 5) குருவாக்கியம், 6) குருவாசகம், 7) தருவாக்கு, 8) தருவாக்கியம், 9) தருவாசகம், 10) திருவாக்கு, 11) திருவாக்கியம், 12) திருவாசகம், 13) அருள்வாக்கு, 14) அருள்வாக்கியம், 15) அருள்வாசகம், 16) மருள்வாக்கு, 17) மருள்வாக்கியம், 18) மருள்வாசகம் 19) அத்தரம், 20) அத்திரம், 21) அத்திறம், 22) சாத்தரம், 23) சாத்திரம், 24) சாத்திறம், 25) சூத்தரம், 26) சூத்திரம், 27) சூத்திறம், 28) தோத்தரம், 29) தோத்திரம், 30) தோத்திறம்,

31) நேத்தரம், 32) நேத்திரம், 33) நேத்திறம், 34) வேத்தரம், 35) வேத்திரம், 36) வேத்திறம் எனும் முப்பத்தாறு நூல்களில் எந்த ஒரு நூலின் ஒரு சிறு பகுதியைக் கூட புரிந்து பயன்படுத்த முடியாதவர்களாகி விட்டார்கள்.

ஏனென்றால், இவையனைத்தும் பதினெண்சித்தர்களுடைய தாய்மொழியான அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இருக்கின்றன. இதைப் போலவேதான் 1. நேமங்கள், 2. இணை நேமங்கள், 3. துணை நேமங்கள், 4. நியமங்கள், 5. இணை நியமங்கள், 6. துணை நியமங்கள், 7. நிடதங்கள், 8. இணை நிடதங்கள், 9. துணை நிடதங்கள், 10. நிட்டைகள், 11. இணை நிட்டைகள், 12. துணை நிட்டைகள், 13. நீதிகள், 14. இணை நீதிகள், 15. துணை நீதிகள் எனும் பதினைந்து நூல்களும் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இருக்கின்றன.

ஆனால், இந்தப் பதினைந்து நூல்களில் துணை நிடதம் என்ற ஒரு நூல் மட்டும் ஓரளவு பிறர் புரிந்து கொள்ளும் வண்ணமும் எம்மதத்தவரும் தங்களுடைய மதத்திற்கேற்ப திரித்து மாற்றிக் கொள்ளும் பாங்கிலும், போக்கிலும் இருக்கின்றது. எனவேதான், பிறமண்ணினரான பிருமணர்கள் இந்தத் துணை நிடதம் என்ற நூலிலுள்ள கருத்துக்களில் தங்களுக்குத் தேவையானவற்றை மட்டும் எடுத்து தங்களுடைய வேத மதத்திற்கேற்பத் திருத்தித் தங்களுடைய சமசுக்கிருத மொழியில் (உபநிஷத்துக்கள்) உபநிசத்துக்கள் என்று மட்டும் எழுதி அதைத் தங்களின் ஹிந்து மதத்திற்குரியனவாக ஆக்கிக் கொண்டார்கள்.

இதேபோல், இந்த மண்ணில் பிறக்கக் கூடிய அல்லது பிறப்பெடுக்கக் கூடிய அனைத்து வகையான பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் உரிய வாழ்க்கை முறை நீதிப்படி அமைவதற்காக மூலப் பதினெண்சித்தர்களுள் ஒருவரான **<u>'மனு'</u>** என்பவர் எழுதிய நீதி நூலான **'மனுநீதி நூல்'** ஓரளவு பிறர் புரிந்து கொள்ளும்

நிலையில் இருக்கின்ற ஒன்றாகும். மேலும் இந்த நூல் மிகத் தெளிவாக 'இந்த மண்ணுலகில் பிறக்கின்ற அனைத்து வகையான பயிரினங்களுக்கும், உயிரினங்களுக்கும் உரிய நீதியைக் கூறுகின்ற ஒரு நூல் எனும் பொருள் தருமாறு; 'ட'ண்ணகரமான **'ண'** வைப் பயன்படுத்தி **'மணுநீதி'** என்றே பெயரிடப்பட்டுள்ளது'.

ஆனால், இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களுடைய வேத மதத்திற்கேற்ப இந்த இந்து மதத்தின் 'மணுநீதி' நூலின் அமைப்பையும், ஒரு சில கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு தங்கள் விருப்பம்போல் ஒரு நூலை எழுதி அந்த நூலுக்கு இந்து மதத்திலுள்ள மணுநீதி நூலைப் போலவே பெயர் வைக்க விரும்பி 'மனிதர்களுக்குரிய நீதி' என்று பொருள் தருமாறு 'ற'ன்னகரத்தைப் பயன்படுத்தி **'மனு நீதி'** என்ற பெயரை வைத்தார்கள்.

இதேபோல், தமிழிலுள்ள **'சுருதிகள்'** என்னும் பதினெண் சித்தர்களுடைய இந்துமத நூலை அடிப்படையாக வைத்து **'ஸ்மிருதிகள்'** என்ற பெயரை உடைய ஒரு நூலைத் தங்களுடைய ஹிந்து மதத்திற்காக சமசுகிருதத்தில் எழுதிக் கொண்டார்கள். இதேபோல், தமிழிலுள்ள நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள் என்றுள்ள பதினாறு வகைப்பட்ட அருளுலக மூலாதார நூல்களில் நான்வேதம் என்ற பெயரை மட்டும் தங்களுடைய ஹிந்து மதத்திற்காக தேர்ந்தெடுத்துக் கொண்டனர் பிறமண்ணினரான பிருமணர்கள்.

ஆனால் இருடிவேதம், அசுரவேதம், யாமவேதம், அதர்வான வேதம் என்ற நான்கு வேதங்களிலுமுள்ள மந்தர மந்திர மந்திற மாந்தர மாந்தரீக ஒலி நயங்களையும், ஒலி நுட்பங்களையும்; அழைக்கின்ற தேவர், தேவதை, தெய்வம், ஆண்டவர், பட்டவர், கடவுள், இறை, எல்லா ... முதலிய நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட அருளுலகத்தவர்களையும் தங்களுடைய சமசுக்கிருத மொழியில் அப்படியே மொழி பெயர்த்துக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால், தமிழ் மொழியிலுள்ள

ஒலிநயங்களையும், ஒலிநுட்பங்களையும், எழுத்தின் வகைகளையும் சமசுக்கிருத மொழியில் உச்சரிக்க முடியாது என்பதேயாகும்.

இவற்றால், இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள் இந்த இந்தியாவில் நான்கு யுகங்களாக இருந்து வரும் இந்து மதம் போல் தங்களுடைய பிருமண வேதமதத்தை ஹிந்து மதம் என்ற புதிய மதமாக உருவாக்க முயற்சித்து; செந்தமிழில் உள்ள இந்து மதத்தின் இருடி வேதத்தை ஒட்டி இருக்கு வேதம் => 'ரிக் வேதம்' என்ற ஒரு வேதத்தையும்; அசுர வேதத்தை ஒட்டி 'யசுர் வேதம்' என்ற ஒரு வேதத்தையும்; யாம வேதத்தை ஒட்டி 'ஸாமவேதத்தை'யும்; அதர்வான வேதத்தை ஒட்டி 'அதர்வண வேதம்' என்ற ஒன்றையும் உருவாக்கித் தங்களுடைய வேதமதமான ஹிந்து மதத்துக்கும் நான்கு வேதங்கள் இருக்கின்றன என்று பெருமைப்பட்டுக் கொள்ள ஆரம்பித்தனர்.

அத்துடன் தமிழில் நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம் என்றிருந்த இந்து மதத்திற்குரிய பதினாறு வகைப்பட்ட நூல்களும் செல்வாக்கிழக்கும் வண்ணம் 'வேதம்' என்ற சொல்லுக்கு 'மறை' என்ற சொல்லும், 'முறை' என்ற சொல்லும், 'நெறி' என்ற சொல்லும் பொருள் விளக்கம் கூறுவதற்காக உருவான சொற்கள்தான் என்ற ஒரு **மாயாவாதத்தை** எழுப்பி விட்டார்கள். அதை அடுத்துத் **தமிழிலுள்ள நான்வேதம்** என்ற சொல் சமசுக்கிருத மொழியிலுள்ள ரிக், யஜீர், சாம, அதர்வணம் எனும் நான்கு வேதங்களைத்தான் குறிக்கும் என்ற **மாயாவாதத்தையும்** ஏற்படுத்தி விட்டார்கள். எனவே தமிழர்களின் அன்றாட வாழ்வில்,

(i) இருடிகளிடமிருந்தும், முனிவர்களிடமிருந்தும் விரும்புகிற சத்திகளை, தெய்வீக ஆற்றல்களை, அருட்சித்திகளைப் பெற விரும்புகிறவர்கள் பயன்படுத்திடும் இருடிவேதம்;

(ii) அசுரர்களிடமிருந்து விரும்புகிற சத்திகளை, தெய்வீக ஆற்றல்களை, அருட்சித்திகளைப் பெற விரும்புகிறவர்கள் பயன்படுத்திடும் அசுர வேதம்;

(iii) நாற்பத்தெட்டு வகைப்பட்ட கடவுள்களிடமிருந்தும், நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடுநிலையினர்களிடமிருந்தும் விரும்புகிற சத்திகளை, தெய்வீக ஆற்றல்களை, அருட்சித்திகளைப் பெற விரும்புகிறவர்கள் பயன்படுத்திடும் யாம வேதம்;

(iv) மண்ணுலகம் கடந்து வாழுகிற பால்வெளியினர், பரவெளியினர், ககன வெளியினர், விசும்பு வெளியினர், விண்வெளியினர், ஆகாயவெளியினர், வான்வெளியினர் எனும் ஏழு வகைப்பட்ட வெளியினர்களிடமிருந்து விரும்புகிற சத்திகளை, தெய்வீக ஆற்றல்களை, அருட்சித்திகளைப் பெற விரும்புகிறவர்கள் பயன்படுத்திடும் அதர்வான வேதம்;

ஆகிய நான்கு வேதங்களான பதினெண்சித்தர்களின் இந்துமத அருளூறு செல்வங்கள், அருள்வழங்கு செல்வங்கள், அருட்கனிமலர்ச் சோலைகள், அருள் நீர் ஊற்றுக்கள், ... இருந்த இடம் தெரியாமல் மூடி மறைய நேரிட்டன, அல்லது மறக்கடிக்கப் பட்டன. அதாவது, மேற்படி பதினெண்சித்தர்களின் இந்து மதத்தில் அன்றாட வாழ்வில் பத்தி சத்தி சித்தி முத்தி எனும் நான்கையும் தரக் கூடிய அருளாற்றலை எவரிடத்தும் ஊற்றெடுக்கச் செய்கின்ற ஆற்றல்மிக்க நான்கு வேதங்களும் தமிழர்களுடைய தாய்மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் இருந்தும் கூடத் தமிழர்கள் இவற்றை மறக்கும்படியும், துறக்கும்படியும் செய்யப்பட்டு விட்டன, செய்யப்பட்டு விட்டன, செய்யப்பட்டு விட்டன.

**[இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்...]**

# குருபாரம்பரிய அறிவுரை

"... 'யாருக்கும் இறைவனைக் காட்டுகிறேன்' என்று உறுதி கூறிச் செயல்படாதே; 'யாரையும் இறைவனை அறியும்படிச் செய்ய வேண்டும்' என்று எண்ணி விவாதத்தில் இறங்காதே; 'யாரையும் நம்ப வைக்க வேண்டும்' என்று தெய்வ சித்திகளால் மாயங்கள் நிகழ்த்தாதே; ... அவரவர் ஊழ்வினையால், சூழ்வினையால், காய்ச்சி உருக்கப்பட்டும், அச்சில் வார்க்கப்பட்டும்; சூடேற்றிச் சூடேற்றித் தட்டியும் கொட்டியும் வெட்டியும் வடிவப்படுத்தப்படும் போதுதான் அருளாளர்கள் உருவாக்கப்படுவார்கள். இறைவனால் தேர்ந்தெடுக்கப் படுபவர்களே இறைவனை உணர்வார்கள். அப்படியவர்கள் உணர்தற்குரிய கருவியாகவே நூல்களும், குருமார்களும், மாயங்களும், சோதனைகளும், ..... இறைவனால் இயக்க அல்லது தோற்றுவிக்கப்படுகின்றன. இதனை உணராது உன் சொந்த உணர்வுகளால் செயல்படாதே என்பதாகக் குருபாரம்பரிய ஏடு குறிக்கின்றது...."

**//13-04-1974இல் புதுக்கோட்டையைச் சேர்ந்த சித்தரடியான் திரு வே. இராமதாசு அவர்களுக்கு குருதேவர் எழுதிய அஞ்சலில் உள்ள வரிகள்.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி



மெய்ஞ்ஞானக்கொடி



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் (கி.பி.785 - 1040) பாரம்பரியத்தில் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானச்சாரியார் **குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் <u>குருவாணைப்படி</u> இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிப் போய்க் கொண்டிருக்கும் கோப்புக்களிலிருந்து வழங்கப்படுகின்றன.

"... இன்றைய நிலையில் உலக வரலாறு கிரேக்கத்திலிருந்தோ, எகிப்திலிருந்தோ, சிரியாவிலிருந்தோ, பாரசீகத்திலிருந்தோ... ஆரம்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த ஆரம்பங்கள் அனைத்தும் தவறானவை, தவறானவை, தவறானவை; பயனற்றவை, பயனற்றவை, பயனற்றவை. ..."

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ10/-